THE HINDU

14 SEP 2021

PAGE 3

# Green energies offer viable alternative: Venkaiah Naidu

## He asks varsities to take up research on renewable energy

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Vice-President Venkaiah Naidu on Monday said green energies offered a viable alternative to meet the growing needs of the country while being sustainable in the long run.

Dedicating to the nation the 2.4 MW rooftop solar power plant commissioned in Pondicherry University, Mr. Naidu said that solar energy in particular had shown the most promise in recent years. This preference for solar plants and solar energy among institutions and people was a very good and welcome sign.

Referring to the Inter-governmental Panel on Climate Change (IPCC) report, he said it cautioned about the rise in global temperature exceeding 1.5 degrees celsius. "Climate change is not a futuristic phenomenon and we are already experiencing it. The next few years are going to be very crucial for our collective action to mitigate climate change," he said.

Noting that India was endowed with vast solar potential, the Vice-President said the National Institute of Solar Energy (NISE) had assessed the country's solar potential to be about 748 GW, assuming 3% of the wasteland area to be covered by solar PV modules. This was a great opportunity waiting to be explored to provide reliable electricity to our remote areas, to reduce carbon emissions and to achieve energy security.



Venkaiah Naidu. S.S. KUMAR

India now had more than 40 GW of installed solar capacity thanks to sustained efforts by the government and private players. The country was ranked fifth globally in solar power capacity and was fast becoming the global leader in 'energy transition'. "The country is now well placed to meet its committed renewable energy targets at the Paris Climate Conference by 2030," he said.

Mr. Naidu also advocated the need to reduce dependency on imported solar components and to achieve self-reliance in solar modules and solar cells. "We have to quickly ramp up production by easing the setting up of manufacturing plants, publicising the subsidy programmes by the government and encouraging small players. States must take an active lead in this regard," he said.

He also called upon universities to take up research work and projects on renewable energy. "My advice to educational institutions is to encourage students to take up final year projects and internships in the field of renewable energy and material sciences. This will not only improve their employment prospects but will also help in promoting innovations and improvements in the domestic solar industry."

Lt. Governor Tamilsai Soundararajan, Chief Minister N. Rangasamy and Speaker R. Selvam were present.

புதன்தோறும் தினமணியுடன்...
தினமணி மகளிர்மணி
படியுங்கள்

தினமணி
செவ்வாய்க்கிழமை, 14 செப்டம்பர் 2021

செவ்வாய்தோறும் தினமணியுடன்...
தினமணி இளைஞர்மணி
படியுங்கள்

# சூரிய ஒளி மின் உற்பத்தித் துறையில் மாணவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்

## குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு

புதுச்சேரி, செப். 13: சூரிய ஒளி மின் உற்பத்தி தொடர்பாக மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்கள் பயிற்சியளிக்க வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு வலியுறுத்தினார்.

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற விழாவில், பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ரூ.15 கோடியிலான 2.4 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டத்தைத் தொடக்கி வைத்து அவர் பேசியதாவது:

பருவ நிலை மாற்றத்துக்கான சர்வதேச குழு வெளியிட்ட அறிக்கையில், உலகளாவிய வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

கால நிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த பசுமை எரிசக்திகளான சூரிய ஒளி, காற்று, நீர் மின் திட்டங்களை அதிகரித்து நமது நாட்டின் தேவையை நிறைவு செய்ய வேண்டும். அண்மைக் காலங்களில் சூரிய ஒளி மின் உற்பத்தி மிக முக்கியமாக விளங்குகிறது.

சூரிய ஒளி மின் கட்டமைப்பில் நிலவும் பற்றாக்குறையைப் போக்க, ஆத்ம நிர்பார் திட்டத்தின் கீழ் இவற்றை உள்நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கு அரசு மானியம் வழங்கி, சிறு-குறு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டும்.

சூரிய ஒளி மின் உற்பத்தி தொடர்பாக மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்கள் பயிற்சியளிக்க வேண்டும். பல்கலைக்கழகங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் ஆய்வுகளை மேம்படுத்த வேண்டும். இது சூரிய ஒளி மின் உற்பத்தித் துறையில் புதிய கண்டுபிடிப்புகளையும், முன்னேற்றத்தையும் உருவாக்கும்.

நீர் ஆவியாதலைத் தடுக்கும் விதமாக, தெலங்கானா மாநிலம், ராமகுண்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 மெகாவாட் நீரில் மிதக்கும் சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டத்தைப் போல, மற்ற மாநிலங்களிலும் அமைக்கலாம்.

இதேபோல, அலுவலகங்கள், வீடுகளின் மேல்தளங்களில் சூரிய ஒளி மின் உற்பத்திக் கட்டமைப்பை அமைக்க ஊக்குவிக்க வேண்டும்.

கல்வி நிறுவனங்களில் நாட்டிலேயே மிகப் பெரிய சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டம், புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.




புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டத்தைத் தொடக்கிவைத்த குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு. உடன் துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன், முதல்வர் என்.ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம்.

**புதுவை ஆளுநர் தமிழிசை:** தெலங்கானா ராஜ்பவன், ஊழியர்கள் குடியிருப்புகள் முழுக்க சூரிய ஒளி மின் உற்பத்தியில்தான் இயங்குகின்றன.

இதேபோல, குஜராத்தில் ஏடிஎம் மையங்கள் சூரிய ஒளி மின் உற்பத்தியில் இயங்குவதைக் கண்டுள்ளேன். புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் அமைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது என்றார் அவர்.

**முதல்வர் என்.ரங்கசாமி:** நமக்கு மின் தேவை அதிகமுள்ளது. சூரிய ஒளி மின் உற்பத்தி மூலம் மின் தேவையை நிறைவு செய்வது மக்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும். ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் 1.5 மெகாவாட், புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 2.4 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து, மின் தேவையை நிறைவு செய்வது பாராட்டுக்குரியது. இதேபோல, அரசுக் கட்டடங்கள், காலியாக உள்ள இடங்களில் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க வேண்டும். மின் உற்பத்தியை அதிகரிப்பதில் பொதுமக்கள் மிகுந்த அக்கறையும், கவனத்தையும் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

**சென்னைக்கு திரும்பினார் குடியரசு துணைத் தலைவர்:** புதுச்சேரியில் இரு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு, திங்கள்கிழமை பிற்பகல் தனி ஹெலிகாப்டர் மூலம் சென்னைக்குப் புறப்பட்ட குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடுவுக்கு, புதுச்சேரி லாசுப்பேட்டை விமான நிலையத்தில் முதல்வர் என்.ரங்கசாமி நினைவுப் பரிசு வழங்கி வழியனுப்பிவைத்தார். புதுவை சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், அமைச்சர்கள், எம்எல்ஏ-க்கள், அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

## 'இளைஞர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சியளிப்பது நாட்டை முன்னேற்ற உதவும்'

புதுச்சேரியில் அண்மையில் தரம் உயர்த்தப்பட்ட புதுச்சேரி அரசு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு திங்கள்கிழமை தொடக்கிவைத்துப் பேசியதாவது: புதுச்சேரி பொறியியல் கல்லூரி, தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக தரம் உயர்ந்துள்ளது. புதுவையின் முதல் மாநில பல்கலைக்கழகம் இது. இதனால், மாணவர்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகும்.

நமது நாடு பருவ நிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதிப்பு, வறுமை ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நமது நாட்டில் 23 சதவீதம் பேர் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளனர். அனைவருக்கும் கல்வி அளிக்கத் திட்டங்கள் கொண்டு வரப்பட்ட பின்னரும் 20 சதவீத மக்கள் கல்வி பெறாத சூழலில் உள்ளனர்.

உலகளவில் நமது நாட்டில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகம். இங்கு, 25 வயதுக்குள் 54 சதவீதம் பேர் உள்ளனர். இளைஞர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியளிப்பதன் மூலம் உற்பத்தி, புதிய கண்டுபிடிப்புகள் உருவாகும். அது நாட்டை முன்னேற்ற உதவும் என்றார்.

நிகழ்வில் புதுவை துணைநிலை ஆளுநர் தமிழிசை, முதல்வர் என்.ரங்கசாமி, அமைச்சர்கள், எம்எல்ஏ-க்கள், அரசு உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

The New Indian Express

14 Sep 2021

Page 3



PLANTING THE SUSTAINABLE SEED

A solar power plant at Pondicherry University (PU) inaugurated on Monday at Puducherry | EXPRESS

DINAKARAN

14 SEP 2021

PAGE 7



சூரிய ஒளி சேமிப்பு கலன்களை தயாரிக்க மானியம் வழங்கி

# சிறு குறு உற்பத்தியாளர்களை மாநிலங்கள் ஊக்கப்படுத்த வேண்டும்

## துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேச்சு




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த விழாவில் சூரிய ஒளி மின்உற்பத்தி நிலையத்தை துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு ரிமோட் பொத்தானை அழுத்தி தொடங்கி வைத்தார். அருகில் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன், முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம்.

**புதுச்சேரி, செப். 14:** புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 15 கட்டிடங்களில் ரூ.15 கோடி செலவில் 2.4 மெகா வாட் கொண்ட சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் துவக்க விழா நேற்று புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள ஜவகர்லால் நேரு கருத்தரங்க கூடத்தில் நடந்தது. துணை வேந்தர் குர்மீத் சிங் வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக கவர்னர் தமிழிசை, முதல்வர் ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதன்மை விருந்தினராக துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு கலந்து கொண்டு சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையத்தை துவக்கி வைத்து பேசியதாவது:

உலகளாவிய வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என்று பருவநிலை மாற்றத்துக்கான பன்னாட்டு அரசுக்குழு எச்சரித்துள்ளது. பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதில் அடுத்த சில ஆண்டுகள் நாம் கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதற்காக சூரிய ஒளி, காற்று, சிறிய நீர் மின் திட்டங்கள் போன்ற மாற்று வழிகளின் மூலம் அதிகரித்து வரும் எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். சமீப காலமாக சூரியஒளி மின் உற்பத்தி மிக முக்கியமாக விளங்குகிறது. உலகளவில் சூரியஒளி மின் உற்பத்தியில் இந்தியா 5 வது இடத்தில் உள்ளது. விரைவில் நாம் முதலிடத்துக்கு வருவோம். நாட்டில் சூரியஒளி சேமிப்புகலன் மற்றும் சூரியஒளி கட்டமைப்பு தயாரிப்பில் பற்றாக்குறை நிலவுகிறது. இவை பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இவற்றை ஆத்ம நிர்பார் திட்டத்தின் கீழ் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டும். இதற்காக சிறு குறு உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கி மாநிலங்கள் ஊக்கப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில் சபாநாயகர் செல்வம், கல்யாண சுந்தரம் எம்எல்ஏ, பதிவாளர் சித்ரா, நிதி அதிகாரி அமரேஷ் சமந்தராயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பேராசிரியர் பாலகிருஷ்ணன் நன்றி கூறினார். விழா முடிந்ததும் அங்கிருந்து புறப்பட்டு கார் மூலம் லாஸ்பேட்டை விமான நிலையம் சென்றார். அங்கு துணை குடியரசு தலைவர் வெங்கையா நாயுடுவுக்கு முதல்வர், கவர்னர், சபாநாயகர், அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் நினைவு பரிசு வழங்கினர். பின்னர், தனி ஹெலிகாப்டர் மூலம் புதுவையிலிருந்து புறப்பட்டு சென்னை சென்றார்.

### ‘பிரதமரின் முன்னோடி திட்டம்’

விழாவில் கவர்னர் தமிழிசை பேசுகையில், தெலங்கானா ராஜ்பவன் ஊழியர்கள் 400 பேர் தங்கக் கூடிய குடியிருப்புகள் முழுமையாக சூரிய ஒளி மின் உற்பத்தியில் தான் இயங்குகிறது. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு மகப்பேறு முதுநிலை மருத்துவம் படித்த போது குஜராத் சென்றிருந்தேன். அப்போது அங்கு சூரியஒளி மின் உற்பத்தியில் ஏடிஎம் இயங்குவதை கண்டு வியப்படைந்தேன். இதுதான் பிரதமர் மோடி முன்னோடி திட்டமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். தற்போது புதுவை பல்கலைக்கழகத்தில் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது’ என்றார்.



### ‘மின் தேவை அதிகரிப்பு’

விழாவில் முதல்வர் ரங்கசாமி பேசுகையில், ‘புதுவையில் மின் தேவை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் புதுவை பல்கலைக்கழத்தில் 2.4 மெகா வாட் மின்சாரமும், ஜிப்மரில் 1.5 மெகா வாட் மின்சாரமும் சூரிய ஒளி மூலம் உற்பத்தி செய்வது பாராட்டுக்குரியதாகும். இது மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும். இதேபோல் அரசு கட்டிடங்களில், காலியிடங்களிலும் சோலார் பேனல்கள் பொருத்தி சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தியை பெருக்குவதில் அக்கறை செலுத்த வேண்டும்’ என்றார்.



DINAMALAR
14 SEP 2021
PAGE 4

# சூரியஒளி மின்சக்தி கருவிகள் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்

## துணை ஜனாதிபதி வலியுறுத்தல்

**புதுச்சேரி, செப். 14–** 'சூரிய ஒளி மின்சக்தி தகடுகள் மற்றும் கருவிகளின் தொகுப்புகளை உற்பத்தி செய்யும் ஆலைகள் அமைப்பதை மாநிலங்கள் ஊக்குவிக்க வேண்டும்'' என, துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேசினார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 2.5 மெகாவாட் திறனுள்ள சூரியஒளி மின்சக்தி நிலையத்தை துவக்கி வைக்கும் நிகழ்ச்சி, பல்கலைக் கழக நேரு அரங்கில் நேற்று நடந்தது. துணை வேந்தர் குர்மீத் சிங் வரவேற்றார்.

சூரிய ஒளி மின்சக்தி நிலையத்தை துவக்கி வைத்து, துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேசியதாவது:

பருவநிலை மாற்றத்துக்கான சர்வதேச அரசுக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகளாவிய வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

பருவநிலை மாற்றம் மற்றும் அதன் பாதிப்புகள் கவலை அளிப்பதாக உள்ளன. நமது அதிகரிக்கும் எரிசக்தி தேவைகளை நிறைவேற்ற, சூரிய மின்சக்தி, காற்று மின்சக்தி, நீர் மின்சக்தி போன்றவை மாற்று எரிசக்தியாக இருக்கும்.

இதில் அண்மைக் காலங்களில் சூரியஒளி மின் உற்பத்தி மிக முக்கியமாக விளங்குகிறது.

உள்நாட்டில் சூரியஒளி சேமிப்பு கலன்கள் மற்றும் சூரியஒளி கட்டமைப்பு தயாரிப்பில் பற்றாக்குறை நிலவுகிறது.

சூரியஒளி மின்சக்தி தகடுகள் மற்றும் கருவிகளின் தொகுப்பை இந்தியா இன்னும் அதிக அளவில் இறக்குமதி செய்கிறது. இதனைக் குறைக்க, இவற்றை 'ஆத்ம நிர்பார்' திட்டத்தின் கீழ் உள்நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டும்.

இதற்கு அரசு மானியம் வழங்கி, சிறு குறு உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும். மாநிலங்கள் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இவற்றின் உற்பத்தியில் மாநிலங்கள் தீவிரமாக பங்காற்றுவதன் மூலம் சூரிய ஒளி மின்சக்தியில் தற்சார்பு நிலையை அடைய முடியும்.

சூரியஒளி . மின் தகடுகள் உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளில் பயிற்சிபெற்ற நபர்கள் குறைவாக உள்ளனர். இது, இத்துறையின் வேகமான வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.

இத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவதில் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டில் முதலீடு செய்ய வேண்டும்.

பொறியியல் கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் இதனை கவனத்தில் கொண்டு, மாணவர்களுக்கு இத்துறைகளில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகளை வழங்க வேண்டும்.

சூரிய மித்ரா திட்டம், இத்துறையில் இளைஞர்களின் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அளிக்கிறது. அதே நேரத்தில் சூரியஒளி மின்சக்தி தொடர்பாக சிறு தொழில் துறையினரை ஊக்குவிக்க வேண்டும்.

அடுத்த சில ஆண்டுகளில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் வளர்ச்சிக்கு சாத்தியம் உள்ளது. எரிசக்தி மாற்றத்தில் உலகளவில் முன்னணி நாடாக இந்தியா மாறிவருகிறது.

40 ஜிகாவாட்டுக்கு மேற்பட்ட சூரிய ஒளி மின்சக்தி கருவிகள் நம் நாட்டில் பொருத்தப்பட்டுள்ளன. சூரிய ஒளி மின்சக்தி திறனில் உலகளவில், இந்தியா 5வது இடத்தில் உள்ளது.

சூரிய ஒளி மின்சக்தி துறையில் புத்தாக்கம் முக்கியமானது. நிலப்பகுதியில் சூரியஒளி மின்சக்தி தகடுகளை பொருத்துவதற்கு மாற்றாக, மிதவை சூரிய மின்சக்தி தகடுகளை பொருத்துவதற்கான மாற்று வழிகளை ஆராய வேண்டும்.

தெலுங்கானா ராமகுண்டத்தில் 100 மெகாவாட் திறனுள்ள மிதக்கும் சூரியஒளி மின்சக்தி நிலையத்தை என்.டி.பி.சி., அமைத்துள்ளது. கட்டடத்தின் கூரைகள் மீது சூரியஒளி மின்சக்தி தகடுகள் பொருத்துவதும், நிலையானது என்பதால், அதுவும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஆராய்ச்சி திட்டங்களை பல்கலைக் கழகங்கள் மேற்கொள்ள வேண்டும்.

இறுதி ஆண்டு படிப்பில், மாணவர்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் திட்டங்கள் மேற்கொள்ளவும், வேலை வாய்ப்பு பயிற்சி பெறவும் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இது, வேலைவாய்ப்பை மேம்படுத்துவதோடு சூரிய மின்சக்தி துறையில் புத்தாக்கம், புதிய கண்டுபிடிப்புகள், முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் கவர்னர் தமிழிசை, முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புதுவை மத்திய பல்கலை.யில் 2.4 மெகாவாட் உற்பத்தி மையம் அமைப்பு

# சூரியஒளி மின் உற்பத்தியில் உலகளவில் 5-வது இடத்தில் இந்தியா

● குடியரசு துணைத் தலைவர் வெங்கய்யா நாயுடு பெருமிதம்

■ புதுச்சேரி

சூரிய ஒளி மின் உற்பத்தியில் உலகளவில் நாம் 5வது இடத்தில் உள்ளோம்;விரைவில் முன்னிலையில் வருவோம் என்று குடியரசு துணைத் தலைவர் வெங்கய்யா நாயுடு தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மத்தியப் பல்கலைக் கழக வளாகத்தில் 2.4 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா பல்கலைக் கழகத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு அரங்கத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவில் குடியரசு துணைத் தலைவர் வெங்கய்யா நாயுடு கலந்து கொண்டு. சூரிய மின் உற்பத்தி நிலையத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது: பருவநிலை மாற்றத்துக்கான சர்வதேச அரசுக்குழு வெளியிட்டுள்ள காலநிலை மாற்றம் குறித்த அறிக்கையில், 'உலகளாவிய வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும்' என எச்சரித்துள்ளது. இது எதிர்கால நிகழ்வல்ல. ஏற்கெனவே இதனை நாம் அனுபவித்து வருகிறோம். காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இப்பணியில் சூரிய ஒளி மின் உற்பத்தி மிக முக்கியமானதாக விளங்குகிறது.

இந்த தருணத்தில், கல்வி நிறுவனங்களில் நாட்டிலேயே மிகப்பெரிய சூரியஒளி மின்உற்பத்தித் திட்டம் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது வரவேற்கக் கூடியதாகும். 'நமது நாட்டின் 3 சதவீத வெற்று நிலங்களில் சூரிய ஒளி மின்தகடுகளை நிறுவுவதன் மூலம் 748 ஜிகாவாட் சூரிய ஆற்றல் கிடைக்கும்' என்று தேசிய சூரிய எரிசக்தி நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.குக்கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்கவும், எரிசக்தி தன்னிறைவை அடையவும் இது வழிவகுக்கும்.

இந்தியா இதுவரை 40 ஜிகாவாட் அளவுக்கான சூரிய மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவியுள்ளது. சூரியஒளி மின் உற்பத்தியில் தற்போது நாம் உலகளவில் 5 வது இடத்தில் உள்ளோம். விரைவில் முன்னிலையில் வருவோம்.

உள்நாட்டில் சூரியஒளி சேமிப்பு கலன்கள், சூரியஒளி கட்டமைப்பு தயாரிப்பில் பற்றாக்குறை நிலவுகிறது. பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. மற்ற நாடுகளை சார்ந்திருப்பதை குறைக்க இவற்றை 'ஆத்ம நிர்பார்' திட்டத்தின் கீழ் உள்நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கு மானியம் வழங்கி, சிறு குறு உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும். மாநிலங்கள் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். சூரியஒளி மின்உற்பத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளில் பயிற்சி பெற்ற நபர்கள் குறைவாக உள்ளனர். இதனை சரி செய்ய வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஆய்வுகளை மேம்படுத்த வேண்டும். மாணவர்களை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உலோக அறிவியலில் திட்டங்களை சமர்ப்பிக்கவும், பயிற்சி பெறவும் ஊக்குவிக்க வேண்டும்.




▲ புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையத்தை குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்யா நாயுடு தொடங்கி வைத்தார். உடன் துணைநிலை ஆளுநர் தமிழிசை, முதல்வர் ரங்கசாமி உள்ளிட்டோர்.

## அரசு கட்டிடங்களில் சூரிய மின் உற்பத்தி

இந்நிகழ்வில் பேசிய முதல்வர் ரங்கசாமி, "ஜிப்மரில் 1.5 மெகாவாட், மத்திய பல்கலைக்கழகத்தில் 2.4 மெகாவாட் சூரியஒளி மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து மின்தேவையை பூர்த்தி செய்வது பாராட்டுக்குரிய ஒன்று. நமக்கு மின்தேவை அதிகம் உள்ளது. இந்த மையங்கள் மூலம் மின் தேவையை பூர்த்தி செய்வது மக்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும். இதேபோன்று அரசு கட்டிடங்கள், காலியாக உள்ள இடங்களில் எல்லாம் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து மின் உற்பத்தியை பெருக்க வேண்டும். பொதுமக்கள் மின் உற்பத்தியை பெருக்குவதில் மிகுந்த அக்கறையும், கவனத்தையும் செலுத்த வேண்டும்."என்றார்.

தெலங்கானா மாநிலம் ராமகுண்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 மெகாவாட் நீரில் மிதக்கும் சூரியஒளி மின்உற்பத்தித் திட்டம் போல மற்ற இடங்களிலும் அமைக்க வேண்டும் என்றார்.

நிகழ்வில் பேசிய துணைநிலை ஆளுநர் தமிழிசை, "தெலங்கானாவில் ராஜ்பவன் ஊழியர்கள் 400 பேர் தங்கக்கூடிய குடியிருப்புகள் முழுக்க சூரியஒளி மின் உற்பத்தியில் தான் இயங்குகிறது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு மகப்பேறு முதுநிலை மருத்துவம் படித்த போது, நான் குஜராத் சென்றிருந்தேன். அப்போதே அங்குள்ள ஏடிஎம் மையம் ஒன்று சூரியஒளி மின் உற்பத்தியில் இயங்குவதை கண்டு வியப்படைந்தேன். இதுதான் நமது நாட்டின் வளர்ச்சி. இதைத்தான் பிரதமர் மோடி முன்னோடி திட்டமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்"என்றார்.

விழாவில் மத்திய பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத் சிங், புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், எம்எல்ஏ கல்யாணசுந்தரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

DINATHANTHI
14 SEP 2021
PAGE 7




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் சூரிய ஒளி மின்சக்தி திட்டத்தை துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு ரிமோட் மூலம் இயக்கி தொடங்கிவைத்தபோது எடுத்தபடம். அருகில் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன், முதல்–அமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம் ஆகியோர் உள்ளனர்.

# பல்கலைக்கழகங்கள் ஆய்வுகளை மேம்படுத்த வேண்டும்

## துணை ஜனாபதிபதி வெங்கையா நாயுடு வலியுறுத்தல்

புதுச்சேரி, செப். 14–
பல்கலைக்கழகங்கள் புதுப்பிக்கத்தக்கஎரிசக்தி துறையில் ஆய்வுகளை மேம்படுத்த வேண்டும் என்று துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு வலியுறுத்தினார்.

### தொடக்க விழா

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் ரூ.15 கோடி செலவில் 2.4 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்கவிழா நேற்று காலை நடந்தது.

விழாவிற்கு கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் தலைமை தாங்கினார். பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் வரவேற்று பேசினார்.

சூரிய மின் உற்பத்தி திட்டத்தை தொடங்கி வைத்து துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

### இந்தியாவிலேயே முதல்முறை

உலக அளவில் வெப்ப நிலை 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என வல்லுனர்கள் எச்சரித்துள்ளனர். பருவநிலை மாற்றம் என்பது எதிர்கால நிகழ்வல்ல. அதனை நாம் ஏற்கனவே அனுபவித்து வருகிறோம். பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த அடுத்த சில ஆண்டுகளில் உலக நாடுகள் கூட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த நாம், பசுமை எரிசக்திகளான சூரிய ஒளி, காற்று, சிறிய நீர் மின் திட்டங்களில் இருந்து மின்சாரம் தயாரிப்பது போன்ற திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

சமீபமாக இந்தியாவில் சூரியஒளி மின்உற்பத்தி மிக முக்கியமாக விளங்குகிறது. இதற்கு மத்திய அரசு பல்வேறு ஊக்குவிப்பு திட்டங்களை வழங்கி வருகிறது. இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் முதல் முறையாக புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தான் மிகப்பெரிய சூரிய ஒளி மின்உற்பத்தித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

### ஆய்வுகளை மேம்படுத்த வேண்டும்

சூரியஒளியில் இருந்து மின்சாரத்தை தயாரிக்கும் போது அதனை சேமிக்கும் எந்திரம் மற்றும் சூரியஒளியில் மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பில் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே இவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. தொழில்நுட்ப கருவிகளுக்காக மற்ற நாடுகளை சார்ந்து இருக்காமல் இருக்க நாம் உள்நாட்டில் உற்பத்தியை பெருக்க வேண்டும்.

சூரியஒளி மின்உற்பத்தி திட்டம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளில் பயிற்சி பெற்ற வல்லுனர்கள் நம் நாட்டில் குறைவாக உள்ளனர். இதனை மேம்படுத்த வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் புதுப்பிக்கத்தக்கஎரிசக்தி துறையில் ஆய்வுகளை மேம்படுத்த வேண்டும். முதுநிலை மாணவர்கள் ஆராய்ச்சி மற்றும் கட்டுரைகள் சமர்ப்பிக்கும் போது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உலோக அறிவியல் திட்டங்களை மேற்கொண்டு அதில் ஆராய்ச்சி செய்ய ஊக்கப்படுத்த வேண்டும்.

### நீர் நிலைகள்

தெலுங்கானா மாநிலம் ராமகுண்டத்தில் நீரில் மிதக்கும் சூரியஒளி மின்உற்பத்தித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதேபோல் நீர் நிலைகள் மீது இந்த திட்டத்தை செயல்படுத்தும் போது நீர் ஆவியாதல் தடுக்கப்படும். நீர் சேகரிப்பு அதிகப்படுத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### தமிழிசை சவுந்தரராஜன்

கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் பேசுகையில், புதுவை பல்கலைக்கழகத்தில் சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இதேபோல் இங்கு மழைநீர் சேகரிப்பு திட்டமும் சிறப்பாகசெயல்படுத்தப்படுகிறது. தெலுங்கானா கவர்னர் மாளிகை முழுவதும் சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தான் பயன்படுத்தப்படுகிறது. கட்டிடங்கள் மற்றும் காலி இடங்களில் இந்த சூரிய மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றார்.

### ரங்கசாமி

விழாவில் முதல்-அமைச்சர் ரங்கசாமி பேசியதாவது:-

சூரிய ஒளியில் இருந்து 2.4 மெகாவாட் மின்உற்பத்தி செய்யும் திட்டம் தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதேபோல் ஜிப்மர் மருத்துவ கல்லூரியில் 1.4 மெகாவாட் திட்டம்தொடங்கப்பட்டுள்ளது. இது அந்த நிறுவனங்களின் மின்சார தேவையை பூர்த்தி செய்யும். இதே போல் அரசு கட்டிடங்கள், காலி இடங்களில் சூரிய மின் உற்பத்தி திட்டத்தை கொண்டு வர வேண்டும்.